**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**OS <u>19/2018</u>**

**<u>09.01.2026.</u>**

**<u>DW1</u>**

**<u>பி.வா.சா.1. விஜயா க/பெ. கணேசன் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:**

இந்த வழக்கில் நான் ஆட்சேபணை தாக்கல் செய்துள்ளேனா என்றால் - தெரியாது. பிரமாண பத்திரத்தில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் - தெரியாது. இந்த வழக்கு சொத்து எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் - கணேசன்-பாலம்மாள் என்பவர்களிடமிருந்து 2007 ம் ஆண்டு கிரயம் வாங்கினேன். அந்த பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் - தாக்கல் செய்துள்ளேன். 2007 பத்திர சொத்து சர்வே எண் தெரியுமா என்றால் - தெரியாது. எவ்வளவு விஸ்தீரணம் என்றால் - 2010 சதுரடி ஆகும். சர்வே எண்ணிற்கு பட்டா இருக்கிறதா என்றால் - இருக்கிறது. கிரயம் வாங்கிய தாவா சொத்தில் வீடு கட்டியுள்ளேன். பத்திரத்தில் நான்கெல்லை குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் - குறிப்பிடப்பட்டுள்ளது. பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நான்கெல்லைப்படி தான் எனது அனுபவம் உள்ளது என்றால் - சரிதான். பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நான்கெல்லைப்படி வடக்கு பக்கம் ராகவாச்சாரியார் நிலமும் அதற்கு வடக்கே வாய்க்காலும் உள்ளது என்றால் - சரியல்ல. அவர் கிரயம் வாங்கியதாக கூறிக்கொண்டு சொந்தம் என தெரிவித்து வருகிறார். பட்டாக்கன்னி என்றால் - அதுப்பற்றி எனக்கு என்னவென்று தெரியாது. கன்னி என்பது முன்னொரு காலத்தில் நஞ்சை சாகுபடி செய்யப்பட்டு பின்பு வாய்க்காலாக பயன்படுத்தப்பட்டது என்றால் - சரிதான். கன்னி சுற்றியுள்ள பகுதிகள் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பகுதியாக மாறிவிட்டது என்றால் - மனைப்பிரிவு என்னவென்று எனக்கு தெரியாது. அங்கு சாகுபடி நிலங்கள் எதுவும் கிடையாது என்றால் - சரிதான். எனக்கு வழங்கப்பட்ட பட்டா புதிய புல எண்.3 உட்பிரிவுகள் அனைத்தும் இரத்தாகிவிட்டது தெரியுமா என்றால் - தெரியாது. இந்த வழக்கு எந்த சர்வே நம்பருக்காக நடத்தப்படுகிறது என்றால் - எனக்கு தெரியாது. புறம்போக்கு வாய்க்கால் என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் - வழக்கறிஞரிடம் தெரிவித்துள்ளேன். அரசு தரப்பினர் வந்து அளந்து பார்த்தார்களா என்றால் - ஞாபகம் இல்லை. பாலம்பாள்-கணேசனிடமிருந்து வாங்கியவர்களில் நான், சின்னதாய், அனுராதா ஆகியோர்கள் தான் என்றால் - சரிதான். பாலம்பாள்-கணேசன் ஆகியோர்கள் ராகவாச்சாரியர் நிலத்தையும் சேர்த்து கிரயம் செய்து கொடுத்துவிட்டதாக கூறி இரத்து செய்து தருவதாக சொன்னார்கள் என்றால் - இல்லை. பாலம்பாள் - கணேசன் ஆகியோர்கள் ராகவாச்சாரியர் நிலத்தையும் சேர்த்து கிரயம் செய்து கொடுத்துவிட்டதாக கூறினார்கள் என்றும் கூடுதலாக கொடுக்கப்பட்ட மனைக்குரிய தொகையையும் என்னிடம் திரும்ப கொடுத்துவிட்டார்கள் என்றும் அதனை நான் பெற்றுக்கொண்டுவிட்டு பிழைதிருத்தல் பத்திரம் பதிவு செய்து தருவதாக சொல்லிவிட்டு இன்று வரை பத்திரம் பதிவு செய்யாமல் இருந்து வருகிறேன் என்றால் - சரியல்ல. அரசு அதிகாரிகள் எனது இடத்தை அளந்து பார்த்துவிட்டு கிரயம் பெற்றதை விட கூடுதலாக அனுபவம் செய்து வருவதாக கூறினார்கள் என்றால் - இல்லை. நான்

தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 பட்டாவில் நான் கிரயம் பெற்ற சொத்து விஸ்தீரணத்தை விட கூடுதலாக சொல்லப்பட்டுள்ளது என்றால் - சரியல்ல. நான் கிரயம் பெற்ற சொத்தை விட கூடுதலாக பட்டா வழங்கப்பட்டு அரசாங்கத்திடமிருந்து எனக்கு வழங்கப்பட்ட பட்டா இரத்து செய்யப்பட்டது என்றால் - சரியல்ல. பட்டா இரத்து சம்மந்தமாக எனக்கு எந்தவித தகவலும் வழங்கப்படவில்லை. நாராயணனுக்கு வழக்கு சொத்து உள்ள பகுதியில் நிறைய மனைகள் உள்ளது என்றால் - சரிதான். அதில் கொஞ்சம் நிலங்களை விற்றுவிட்டார் என்றால் - அதுபற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கு சொத்தின் புதிய புல எண்.2 என்றால் - அதுபற்றி எனக்கு தெரியாது. நான் கிரயம் பெற்ற சொத்தை விட வழக்கு சொத்தையும் அனுபவம் செய்து வருவதால் தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் - சரியல்ல. வாதிகள் தான் வழக்கு சொத்தை அளந்து காட்டாமல் இருக்கிறார்கள். நான் கிரயம் பெற்றதை விட கூடுதலாக இருக்கும் இடத்தை வாதிகள் வசம் ஒப்படைக்க தயாராக இருக்கிறேனா என்றால் - தயாராக இருக்கிறேன்.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,
சார்பு நீதிபதி,
மன்னார்குடி.